# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1999/30 - 2016 දෙසැම්බර් මස 27 වැනි අඟහරුවාදා - 2016.12.27

*1999/30 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 104/44 (V)*

***(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்***

*114 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*"றிவைவல் கிறிஸ்டியன் மினிஸ்ட்ரி மன்றத்தின்"* நம்பிக்கைப் பொறுப்பாளர்களான,

1. வண. மேரிஜோசப் கிரேட் ஜெயகுமார்
2. திரு. ஜோர்ஜ் மனோகரன் ஆரியதாஸ்

ஆகியோர், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படுவதற்காக நீதியமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளனராதலால்.

மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களைக் கூட்டிணைப்பதற்கு இக்கட்டளை மூலம் அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன், பின்வருமாறு பணித்து வெளிப்படுத்துகின்றேன் :-

(அ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் விதிகளின் கீழும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. எல். எவ். டி சேரம் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 2 ஆந் திகதிய 4107 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகையின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்டு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களும் அவர்களின் அடுத்துறுபவர்களும் "றிவைவல் கிறிஸ்டியன் மினிஸ்ட்ரி மன்றம்" என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டு மென்றும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு சார்பில் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெறலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறு வகையாகக் கொள்ளலாம், விற்பனை செய்யலாம், கொடுத்து மாற்றலாம், ஈடு வைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறு வகையில் கையுதிர்க்கலாமென்றும் ; அத்துடன்

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர், சொல்லப்பட்ட பெயரினாலும் மகுடத்தினாலும் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு தொடர்பாக எழுகின்ற எல்லா வழக்குகளிலும் நடவடிக்கைகளிலும் இலங்கையிலுள்ள அல்லது வேறெங்கேனும் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும் வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடையளிப்பதற்கும் விடையளிக்கப்படுவதற்கும் எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டத்தில் இயன்றவர்களாகவும் தகுதிவாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்றும்.

இக்கட்டளையானது இல்லாதொழிக்கப்படலாம் அல்லது அவசியமென எனக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

விஜயதாச ராஜபக்ஷ,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
*2016, திசெம்பர் 19.*

*1- 293*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.